9420

20/09/24

S

# காலாண்டுப் பொதுத் தேர்வு- 2024

## ஒன்பதாம் வகுப்பு

IX - D

நேரம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15×1=15

1) தமிழ்விடுதூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) "காலம் பிறக்குமுன் பிறந்தது தமிழே! - எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! .. இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

3) இந்தியநாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று கூறியவர் ________
அ) கால்டுவெல் ஆ) அகத்தியலிங்கம் இ) ராஸ்க் ஈ) மாக்ஸ்முல்லர்

4) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

5) <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

6) பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

7) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

8) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசிய திறனறி, கல்வி உதவித்தொகை தேர்வு ஈ) மூன்றும் சரி

9) ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

10) <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு -
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

11) 'மிசை' - என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

CREDIT: t.me/Karthi_fx_2k

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கீழ்க்கண்ட பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்:
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே:

12) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?
அ) எட்டுத்தொகை ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) அகநானூறு

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) ஔவையார் ஆ) மோசிகிரனார் இ) குடபுலவியனார் ஈ) சேக்கிழார்

14) யாக்கை என்னும் சொல்லின் பொருள் __________
அ) செவி ஆ) உடம்பு இ) தலை ஈ) கண்

15) அமையா - இலக்கணக் குறிப்பு தருக.
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) வினைத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## பகுதி - 2
### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:- **4×2=8**

வினா எண். 21 கட்டாய வினா

16) விடைக்கேற்ற வினா அமைக்க
அ) மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாள்களில் தமிழ்மொழி இடம் பெற்றுள்ளது.
ஆ) முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்

17) கண்ணி என்றால் என்ன?

18) கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.

19) ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

20) கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

21) “எனைத்தானும்” எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்:- **5×2=10**

22) செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

23) பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க
(அழகாக, வேகமாக, மெதுவாக)
அ) காலம் __________ ஓடுகிறது
ஆ) ஊர்தி __________ சென்றது

24) பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி, ஏற்ற துணைவினைகளை இட்டு எழுதுக.
மார்னிங் எழுந்து, பிரஷ்பண்ணி, யூனிபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனாள்

CREDIT: KARTHI FX 2K IN TELAGRAM

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25) பிழை நீக்கி எழுதுக.

அ) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்

ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணைபுரிகின்றன.

26) மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) மேடும் பள்ளமும் ஆ) கண்ணும் கருத்தும்

27) வல்லினம் மிகா இடங்களுக்குச் சான்று தருக.

28) கலைச்சொல் தருக.

அ) Hero stone ஆ) Download

பகுதி - 3

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி: **2×3=6**

29) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

30) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

31) பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

கவிஞர் வைரமுத்து தேனி மாவட்டத்திலுள்ள மெட்டூர் என்னும் ஊரில் பிறந்தவர். இந்திய அரசின் உயர்ந்த விருதுகளுள் ஒன்றான பத்மபூஷண் விருதினைப் பெற்றவர். கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்துக்காக 2003ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருது பெற்றவர். இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழு முறையும், மாநில அரசின் விருதினை ஆறு முறையும் பெற்றவர்

அ) கவிஞர் வைரமுத்து பெற்ற உயர்ந்த விருது எது?

ஆ) சாகித்ய அகாதெமி விருதுபெற்ற வைரமுத்துவின் புதினம் யாது?

இ) இப்பத்தியில் இடம்பெற்றுள்ள குறிப்புகள் யாரைப் பற்றியவை?

பிரிவு - 2

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.

வினா எண். 34 கட்டாய வினா **2×3=6**

32) அறிவையும், உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

33) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

34) காடெல்லாம் எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடலை எழுதுக. (அல்லது) "ஒன்றறிவதுவே" எனத் தொடங்கும் தொல்காப்பியர் வழியான உயிர்வகைப் பாடலை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. **2×3=6**

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36) வல்லினம் மிகும் இடங்களுக்கு மூன்று சான்றுகள் தருக.

37) சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக:

மழை பெய்தது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதி - 4

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- 5×5=25

38) அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

39) அ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எஸ். இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.


40) நயம் பாராட்டுக.

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிளெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

- ம.இலை. தங்கப்பா

41) உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.

42) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



பகுதி - 5

கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவாக விடையளிக்கவும்:- 3×8=24

43) அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக. (அல்லது)

ஆ) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி?

44) அ) "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. (அல்லது)

ஆ) இந்திய விண்வெளித் துறையில் தமிழர்கள் ஆற்றிய பங்கினை விவரி.

45) அ) உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டு உரிய தலைப்புகளுடன் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

********

FOLLOW MY CHANNEL IN TELAGRAM FOR MORE UPDATE QUESTION.
CREDIT: KARTHI FX 2K ON TELANGRAM

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com